**செய்தி வெளியீடு எண் : 860** **நாள்: 19.11.2009**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>பொது விநியோகத் திட்டத்தில் குறைபாடுகள் ஏதேனும் இருந்தால் மாநில நுகர்வோர் தொலை தொடர்பு உதவி மையத்திற்கு புகார் தெரிவிக்கலாம். மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு</u>**

* * * *

நாமக்கல் மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் தொடர்ந்து இன்று (19.11.2009) காலை 9.00 மணிக்கு சிறப்பு ஆய்வு குழுவினருடனும், அரசு உயர் அலுவலர்களுடனும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள். பொது மக்களையும் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்.

முதலில் நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின், வேலூர் கடை எண். 1 மற்றும் 2, சுல்தான்பேட்டை கடை எண்.3, போத்தனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் நியாயவிலைக் கடை எண்.2 மற்றும் 6, பரமத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கடை எண்.1 மற்றும் 2, நடந்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கடை எண்.1, நல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பீச்சம்பாளையம் மற்றும் குன்னம்பாக்கம் நாமக்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் குன்னப்பாளையம் நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் நகரிலுள்ள கடை எண்.1 மற்றும் 2 ஆகிய நியாயவிலைக் கடைகளில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

போத்தனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் நியாயவிலைக் கடை எண்.6 ஒரு மிகவும் குறுகலான இடத்தில் இருப்பதால் பொது மக்கள் வரிசையில் நின்று பொருட்களை பெறுவதில் உள்ள சிரமங்களை அறிந்து 10 நாட்களுக்குள் வேறு ஒரு வசதியான இடத்தில் கடையை மாற்றிட ஆணையிட்டார்கள்.

போத்தனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் நியாயவிலைக் கடை எண்.2ல் குடும்ப அட்டைதாரர்கள் பொருட்கள் வாங்க வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தரமான முறையில், எடை குறைவில்லாமல் வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தார்கள். வேலூர் கடை எண்.2ல் 1,600 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளது, அங்கே நின்றுகொண்டிருந்த அட்டைதாரர்களிடம் விசாரித்த போது நீண்ட தூரத்திலிருந்து

தாங்கள் வருவதாகவும், வரிசையில் நின்று நீண்ட நேரம் காத்திருந்து பொருட்களை பெறவேண்டியுள்ளது என்று தெரிவித்ததைத் தொடர்ந்து கடையை இரண்டாக பிரிக்க ஆணையிட்டார்கள். சுல்தான்பேட்டை கடை எண்.3ல் வரிசையில் நின்றிருந்த கந்தன் நகரைச் சேர்ந்த பெரியம்மா என்பவரின் வறிய நிலையை கேட்டறிந்து அவருக்கு அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டை வழங்க ஆணையிட்டார்கள். பரமத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கடை எண்.1 மற்றும் 2ல் ஆய்வு மேற்கொண்டு, அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் வறியவரில் மிகவும் வறியவராக இருப்பவர்களை பயனாளிகளாக சேர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

வேலூர் தெற்கு தெருவில் வீடு வீடாகச் சென்று பொது மக்களை சந்தித்து நியாயவிலைக் கடைகள் மூலம் அனைத்து பொருட்களும் தரமான முறையில், எடை குறைவில்லாமல் வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தார்கள். அவர்கள் நியாயவிலைக் கடையிலிருந்து பெற்று வந்த அரிசியை கொண்டு வரச் சொல்லி அவற்றின் தரத்தை பரிசோதித்து மீண்டும் எடை போட்டுபார்த்து சரியாக இருந்ததால் திருப்தி தெரிவித்தார்கள். குழுமியிருந்த பொது மக்கள் தாங்கள் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்று தெரிவித்ததைத் தொடர்ந்து கடையை இரண்டாக பிரிக்கவும் ஆணையிட்டார்கள்.

பொது விநியோக திட்டத்தில் குறைகள் ஏதேனும் இருந்தால் பொது மக்கள் **044–28592828** என்ற தொலை பேசி எண்ணுக்கும் மேலும் நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் சேவையில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் உடனடியாக நாமக்கல் மாவட்ட வழங்கல் அலுவலருக்கு 9445000232 என்ற செல் பேசியிலும், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 04286- 281101 என்ற தொலைபேசியிலும் புகார்களை தெரிவிக்கும்படி பொது மக்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

வீடு வீடாக சென்றும், பொதுமக்களை சந்தித்தும் நியாயவிலைக் கடைகளில் ஆய்வும் மேற்கொண்டு மாலை 3.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் நியாயவிலைக் கடை பணியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய

நெறிமுறைகள், கடமைகள், பொறுப்புகள், அங்காடி பராமரிப்பு, மாதிரிகள் காட்சிப்படுத்துதல், அறிவிப்பு பலகைகள் பராமரிப்பு, பதிவேடுகள் பராமரிப்பு, ''அ'' பதிவேடு பராமரித்தல், பொருள் தேவை கணக்கிடுதல், சரியான எடையில் வழங்குதல், தரமான பொருட்களை வழங்குதல், அறிக்கை அனுப்புதல் குறித்து விரிவான **நியாயவிலை அங்காடி கையேடு** தயார் செய்யப்பட்டு ஒவ்வொரு நியாயவிலைக் கடைக்கும் அனுப்பப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு இந்த கையேட்டின்படி 3 மாதங்களுக்கு ஒரு முறை மண்டல இணைப்பதிவாளரால் வட்ட வாரியாக பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

வட்ட வழங்கல் அலுவலர்கள் ஒவ்வொரு மாதமும் 3ம் தேதிக்குள் நியாயவிலைக் கடைகளுக்கு ஒதுக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாதமும் 25–ம் தேதி முதல் மாத இறுதி நாளுக்குள் அத்தியாவசியப் பொருட்களை முன் நகர்வு செய்தும், 1–ம் தேதி முதல் 20–ம் தேதிக்குள் மீதம் நகர்வு செய்யப்பட வேண்டிய அத்தியாவசியப் பொருட்களையும் நகர்வு செய்து நியாயவிலைக் கடைகள் மூலம் மக்களுக்கு பொருட்கள் போய் சேரும் நிலைமையை உருவாக்க வேண்டும். தற்போது ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலிருந்தும் பொருட்களின் இருப்பு அளவினை குறுந்தகவல் (S.M.S.) மூலம் தினந்தோறும் நியாயவிலைக் கடை விற்பனையாளர்களின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. வட்ட வழங்கல் அலுவலர்கள் இந்த இணையதளத் தகவல்களை தினசரி ஆய்வு செய்து இருப்பு இல்லாத கடைகளுக்குத் தேவையான பொருட்களை நகர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நியாயவிலைக் கடையிலுள்ள அ பதிவேட்டுடன் வட்ட வழங்கல் அலுவலகத்திலுள்ள அ பதிவேட்டை ஒத்திசைவு செய்து வட்ட வழங்கல் அலுவலர்கள் அதில் கையொப்பமிட வேண்டும். அ பதிவேடுகளில் நியாயவிலைக் கடை பணியாளர்கள் பதிவு செய்ய அனுமதிக்கக் கூடாது. மண்ணெண்ணெய் தவிர இதர அனைத்துப் பொருட்களையும் குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய அளவிற்குட்பட்டு அவர்கள் கேட்கும் நாளில், அட்டையின் தகுதிக்குட்பட்டு கேட்கும் அளவில் வழங்குகிறார்களா என்பதையும், சர்க்கரை குடும்ப அட்டைக்கு அரிசியைத் தவிர இதர அனைத்துப் பொருட்களும் வழங்கப்படுகிறதா என்பதையும், அத்தியாவசியப் பொருட்களை பொது மக்கள் பார்க்கும்வண்ணம் நியாயவிலைக் கடை பணியாளர்கள் வைத்திருக்கிறார்களா என்பதையும் கண்காணிக்க வேண்டும்.

ஒவ்வொரு நியாயவிலைக் கடைகளுக்கும் உரிய அளவில் 100% அரிசி ஒதுக்கீடு செய்து அட்டைதாரர்களுக்கு உரிய அளவில் 12 கிலோ முதல் 20 கிலோ வரை

வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். புதிய குடும்ப அட்டை வழங்கும்போது அசல் நீக்கல் சான்றினைப் பெற்று பரிசீலிக்க வேண்டும். கிடங்குகளிலிருந்து தரமற்ற பொருட்களை வழங்கினால் அதை திருப்பி அனுப்பி நல்ல தரமான பொருட்களை பெற்று வழங்க வேண்டும், மகளிர் சுய உதவிக் குழுவினர் நடத்தும் நியாயவிலைக் கடைகளை வட்ட வழங்கல் அலுவலர் அடிக்கடி தணிக்கை செய்ய வேண்டும். 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்க வேண்டும், தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும், நியாயவிலைக் கடைகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், நியாயவிலைக் கடைகளில் முறையற்ற வகையில் யாரையும் பணி செய்ய அனுமதிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்கள். பொது மக்கள் கடைகளில் வரிசையில் நின்று பொருட்களை பெறுவதில் தாமதம் ஏற்படுவதை தவிர்க்க 1600 குடும்ப அட்டைகளுக்கு மேலுள்ள கடைகளை இரண்டாக பிரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், ஒவ்வொரு பொருளையும் பெற ஒவ்வொரு நாள் வர வேண்டும் என்பது ஏற்கக்கூடியதல்ல. ஆகையால் அனைத்துப் பொருட்களையும், அனைத்து நாட்களிலும் வழங்க வேண்டும். மேலும், விற்பனையாளர் பதவிகளிலுள்ள காலிப் பணியிடங்களை 10 தினங்களுக்குள் இணைப்பதிவாளர் நிரப்ப வேண்டும்

கிடங்குகளிலிருந்து அனுப்பப்படும் பொருட்கள் தான் நியாயவிலைக் கடையில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை மண்டல மேலாளர்கள் கண்காணிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

அதன் பிறகு மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. வீர சண்முகமோனி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்வு பொருள் வாணிபக் கழகம், திரு. சி.என். மகேஸ்வரன், இணை ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு.உ. சகாயம், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல், திரு. சித்திரசேனன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர், திருமதி. சாந்தி, நாமக்கல் மாவட்ட வருவாய் அலுவலர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**